**மண்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டம் - 2017**

மண்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆம் திகதிய எஸ்எல்-பி 109 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள உயர் நிலப்பகுதிகளில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் தேசிய வீதிகளின் மண்சரிவு அனர்த்தங்களை குறைப்பதற்கும் அதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களித்து வீதி வலையமைப்புப் பாதுகாப்பினை முன்னேற்றி வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களை உள்ளடக்கிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,754 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 9,841 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 11,423 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 7,619 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 05 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்

கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 76.5 மில்லியன் தொகை மற்றும் வெளிநாட்டு மதியுரையாளர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீதான பொருளாதார சேவைக் கட்டண வரி மற்றும் வருமான வரி மீளளிப்பு ரூபா 2.44 மில்லியன் கூட்டுத்தொகை என்பன செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பண்டாரவளையிலுள்ள உள்ளூர் மதியுரையாளர் மற்றும் வதிவிட பொறியியலாளர் மற்றும் பதுளையிலுள்ள வேலைத்தள பொறியியலாளர் ஆகியோரின் உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக செயற்திட்டப் பொதி - 02 இன் கீழ் ரூபா 14.87 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 7,619.00 | 11,423.00 | 1,270.00 | 911.47 | 1,212.79 | 1,405.53 | 1,826.17 |
| இலங்கை அரசாங்கம் | 2,222.00 | 3,331.00 | 278.00 | 105.53 | 140.41 | 203.32 | 263.03 |
| | **9,841.00** | **14,754.00** | **1,548.00** | **1,017.00** | **1,353.20** | **1,608.85** | **2,089.20** |

மேற்படி தகவல்களின் பிரகாரம் கடனளிக்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 11,423 மில்லியனிற்குச் சமமான யென் 7,619 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,826.17 மில்லியனிற்குச் சமமான யென் 1,405.53 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 03½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீகச் முன்னேற்றம்

வீதி அனர்த்த முகாமைத்துவத்திற்காக மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள 16 இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தங்கள் 02 பொதிகளின் கீழ் 2017 மார்ச் 01 இல் ரூபா 6,094.48 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் 2019 மார்ச் 21 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட வேலைத்திட்டங்களின் பிரகாரம் 24.5 சதவீத மற்றும் 38.12 சதவீத பௌதீக செயன்முன்னேற்றங்கள் முறையே பொதி 01 மற்றும் பொதி 02 இன் கீழ் முறையே அடையப்பட வேண்டியிருந்த போதிலும் அத் திகதியிலுள்ளவாறு 1.95 சதவீத மற்றும் 34.88 சதவீத செயன்முன்னேற்றங்களே அடையப்பட்டிருந்தன. 2017 மார்ச் 24 இல் பொதி 01 இன் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை ஒப்பந்ததாரரொருவருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் றம்பொட, தெலிகம, பிற்றவல மற்றும் கினிகதேன வேலைத்தளங்களிலுள்ள நிர்மாண வேலைகள் 2018 செப்தெம்பர் 12 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பு திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய 09 வேலைத்தளங்களின் கீழான நிர்மாண வேலைகள் மீது மெதுவான செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெப்பெற்றிபொல மற்றும் ரொப்பாஸ் வேலைத்தளங்களிலுள்ள நிர்மாண வேலைகள் பொதி - 01 இன் கீழ் ரூபா 357 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அரச உடமையாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்டப் பொதி 02 இன் கீழ் கூட்டுமுயற்சி பங்காளரொருவராக நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள உப ஒப்பந்ததாரர் ஒருவரூடாக ஒப்பந்ததாரரால் நிர்மாண வேலைகள் தொடரப்பட்டிருந்தமை 2018 ஒக்தோபரில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கள விஜயங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2013 சனவரி 16 இன் 13/0076/504/005 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்திட்டம் உயர் நிலப் பகுதிகளில் ‘‘ஏ’’ தர தேசிய வீதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைளிற்கான வேலைகளை அமுல்படுத்த வேண்டிய போதிலும் மேற்படி கொள்கைக்கு முரணாக ரூபா 412.65 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக பொதி - 01 இன் கீழ் நாவலப்பிட்டிய பகுதியிலுள்ள ஏபீ தர வீதி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் மண்சரிவுகளை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளாக நாவலப்பிட்டிய, கஹகல்ல மற்றும் லுணுகல பகுதிகளில் ரூபா 490.44 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 10 வடிகால் கிணறுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் ஆதன உரிமையாளர்களிற்கு வேலைத்தளங்கள் கையளிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நீடித்திருக்கும் வகையில் கிணறுகளின் பராமரிப்பு தொடர்பாக எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாண வேலைகளிற்காக கடினமான கற்பாறை பாதுகாப்பு நடவடிக்கைகள் (Rock Bold countermeasures) நாவலப்பிட்டியவிலுள்ள தியகலவில் மேற்கொள்ளப்பட்ட அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளில் பிரயோகிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றின் மீது ரூபா 62.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிரிமாணத்தின் பகுதியொன்று அடர் மழை காரணமாக இடிந்து விழுந்திருந்ததனால் பாதுகாப்பு அளவீடொன்றாக பிரயோகிக்கப்பட்ட முறைமை கேள்விக்குரியதாக இருந்தது.

(உ) பேராதனை - பதுளை - செங்கலடி வீதியின் லுணுகலவில் அமைந்துள்ள வடிகால் கிணற்றிலிருந்து தண்ணீர் நிரம்பி வழிவதற்காக வீதிக்கும் தண்ணீர் குழாய் வரிசைக்கும் இடையே பாதுகாப்பான பகுதியை ஒதுக்காமல் குழாய் வரிசைகள் நிறுவப்பட்டிருந்தமை களப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அவற்றின் மீதான முறைமைக்கு ஏற்படக்கூடியதாக இருந்த சாத்தியமான சேதங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 11 பகுதிகளின் மண்சரிவுகளிற்கான பாதுகாப்பு நடவடிக்கையாக ரூபா 43.77 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நீர்த்தாவர விதைகளை இடுவதற்கு (Spread hydro seeding) செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதில் ரூபா 3.07 மில்லியன் தொகை லுணுகல பகுதியில் நீர்த்தாவர விதைகளை இடுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. நீர்த்தாவர விதைகள் இடப்பட்ட பகுதியில் உள்ளூர் புல் வளர்ந்திருந்தமையால் எதிர் நடவடிக்கை நோக்கங்களிற்கான வெற்றிகரமான

மாற்று நடவடிக்கையொன்றாக நீர்தாவரங்களை பயரிடுதல் காணப்பட்டிருக்கவில்லை என்பதை சான்றுபடுத்தியிருந்தமை 2018 செப்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

2014 இல் உரிமம் பெற்ற விசேட வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனில் ரூபா 09 மில்லியன் தொகை செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கடனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளின் 14.6 ஆம் உப உட்பிரிவின் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழின் ஆகக்குறைந்த தொகை மதிப்பீட்டு நோக்கங்களிற்காக இணங்கப்பட்ட ஒப்பந்த தொகையின் 02 சதவீதமாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 09 இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் நிர்மாண வேலைகளின் மந்தமான பௌதீக செயன்முன்னேற்றம் காரணமாக முன்னரே தீர்மானிக்கப்பட்ட தொகையை விடக் குறைவாக காணப்பட்டது.

(ஆ) 02 ஒப்பந்ததாரர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 90.34 மில்லியன் மற்றும் ரூபா 89.50 மில்லியன் தொகைகள் கொடுப்பனவுகளின் தன்மை மற்றும் தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் முறையே பொதி 01 மற்றும் பொதி 02 இற்கான ஒருமுறை கொடுப்பனவுகள் (lump sum payments) மற்றும் பொது செலவினங்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அவ் மதிப்பீடுகளில் ரூபா 167.6 மில்லியன் தொகை 2018 யூன் 30 வரை 02 ஒப்பந்ததாரர்களால் கோரப்பட்டிருந்தன.

(இ) உள்ளூர் வரிகளிற்கான விலக்களிப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக ஒப்பந்ததாரர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீது மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 204 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 2.42 மில்லியன் தொகையான வருமான வரி மற்றும் ரூபா 3.37 மில்லியன் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி என்பன மதியுரையாளரின் சார்பில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் பொறுப்பேற்கப்பட வேண்டியிருந்தது.

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

உள்ளூர் மதியுரையாளர்களின் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும் 02 உள்ளூர் மதியுரையாளர்கள் 2017 யூலையில் நியமனம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.